1973 ஏப்ரல் 2]

வைக்கும் எந்திரங்களையும் அமைத்துள்ளது. மீனவர் கிராமங்களை முக்கிய சாலைகளோடு இணைக்க வேண்டிய அவசியம் உள்ள இடங்களில் சாலைகளும் போடப்படுகின்றன. மீன் பிடிக்கும் இடத்திலிருந்து மீனை அங்காடிக்கு விரைவாகக் கொண்டு செல்லும் வகையில் வண்டிகளும் கொடுக்கப்படுகின்றன.

9. செங்கற்பட்டு மாவட்டத்தில் 40,000 டன் மீன்கள் பிடிக்கப் படுகின்றன. அதில் மூன்றில் ஒரு பகுதி உள்நாட்டு நீர் நிலைகளில் பிடிக்கப்படுவதாகும். உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் 26 உள்ளன. அவை ஒரு கூட்டமைப்பாக அமைந்துள்ளன.

இணைப்பு —II

[175-ம் பக்கத்தில் 12-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிடாத வினாவிற்குரிய விடையைக் காண்க.]

பாடல் : புத்தம் புதியதொரு திட்டம் வருகுது
அத்தனையும் உங்களுக்கே
செலவோ ஒரு ரூபாய்
வரவோ ஒரு லட்சம்.

ஆண் : தமிழக பரிசுச் சீட்டின் புதியத் திட்டப்படி
முதல் பரிசு வரிசைக்கும் லட்சம் உண்டு.

பெண் : ஆறுதல் பரிசுகளும் உண்டு.

ஆண் : தமிழகப் பரிசுச் சீட்டின் வருவாய்
மக்கள் நல் வாழ்வுக்கே பயன்படுகிறது.

பெண் : வாங்கிடுவீர் தமிழகப் பரிசுச் சீட்டு !

பாடல் : புத்தம் புதியதொரு திட்டம் வருகுது
அத்தனையும் உங்களுக்கே !

பாடல் : தமிழக அரசின் பரிசுச் திட்டம் ! பரிசுத் திட்டம் !!
நம்மை கூவுது ! நம்மை நாடுது ஆஹா
ஆயிரமாயிரம் பரிசுகள் நமக்காக காத்திருக்குது
தமிழக அரசின் பரிசுத் திட்டம் ! பரிசுத் திட்டம் !

[1973 ஏப்ரல் 2

ஆண் : தமிழகப் பரிசுச் சீட்டின் புதியத் திட்டப்படி
முதற் பரிசு வரிசைக்கும் லட்சம் உண்டு.

பெண் : ஆறுதல் பரிசுகளும் உண்டு.

ஆண் : தமிழகப் பரிசுச் சீட்டின் வருவாய்
மக்கள் நல் வாழ்வுக்கே பயன்படுகிறது.

பெண் : வாங்கிடுவீர் தமிழகப் பரிசுச் சீட்டு !

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS